# Indian Polity Notes Part 5 in Tamil

## 5] குடியுரிமை

**(சரத்துக்கள் 5 – 11)**

- இந்தியாவில் ஒற்றைக் குடியுமை பின்பற்றப்படுகிறது.
- குடியுரிமை பற்றி சட்டம் இயற்றும் அதிகாரம் கொண்டது நாடாளுமன்றம் ஆகும்.
- 1955 – ல் இந்திய குடியுரிமை சட்டம் இயற்றப்பட்டது.

**குடியுரிமை பெறும் முறைகள்**

**இந்திய அரசியலமைப்புச் சட்டம் தொடங்கிய பொழுது (சரத்து – 5)**

- இந்தியாவை உறைவிடமாக கொண்டு, இந்தியாவில் பிறந்தவராக இருந்தாலோ அல்லது அவரது பெற்றோரில் எவரேனும் ஒருவர் இந்தியாவில் பிறந்தவராகவோ அல்லது இந்திய அரசியலமைப்புச் சட்டம் தொடக்கத்திற்கு உடன் முந்திய 5 ஆண்டுகளுக்கு குறையாமல் குடியிருந்து வந்தவராக இருக்க வேண்டும்.

**குடிபெயர்தல் மூலம் குடியுரிமை பெறுதல் (சரத்து 6 – 7)**

- இந்திய அரசியலமைப்புச் சட்டம் தொடங்கும் பொழுது பாகிஸ்தானிலிருந்து இந்தியாவிற்கு குடிபெயர்ந்து வந்தவர்களும் இந்தியக் குடிமக்களாவர்.
- தற்போது பாகிஸ்தானுடன் உள்ளடக்கிய பரப்பிடத்திலிருந்து குடிபெயர்ந்து வந்தவர்களும் குடிமக்களாக கருதப்படுவர்.
- ஆனால் அவர்களோ அல்லது அவர்களது பெற்றோரோ அல்லது பெற்றோரின் பெற்றோரில் ஒருவரோ 1935 – ம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டபடி இந்தியாவில் பிறந்தவராக இருக்க வேண்டும் மற்றும் அவர்கள் 19.07.1948 – ம் தேதிக்கு பின் குடிபெயர்ந்தவராக இருப்பின் ஆறுமாத காலமாவது இந்தியாவில் குடியிருந்து குடிமக்களாக ஆவதற்கு பதிவு செய்திருக்க வேண்டும்.

**பதிவு செய்து கொள்ளல் மூலம் குடியுரிமை பெறல் (சரத்து – 8)**

- ஒருவர் தாமோ அல்லது தம் பெற்றோரில் ஒருவரோ அல்லது தம் பெற்றோரின் பெற்றோரில் ஒருவரோ 1935 – ம் ஆண்டின் இந்திய அரசாங்க சட்டத்தின் வரையறுப்பப்பட்டபடி இந்தியாவில் பிறந்து, இந்திய எல்லைக்கு அப்பால் உள்ள வெளிநாட்டில் வழக்கமாக குடியிருந்து வருவராக குடியிருந்து வரும் நாட்டில் உள்ள இந்திய தூதுவரிடம் விண்ணப்பம் செய்து, தம்மை ஒரு இந்தியக் குடிமகனாக பதிவு செய்து கொள்ள வேண்டும்.

**இந்தியக் குடியுரிமையை இழத்தல் (சரத்து – 9)**

- இந்திய அரசியலமைப்புச் சட்டம் தொடங்குவதற்கு முன்பு ஒரு இந்தியக் குடிமகன் தன்னிச்சையாக ஒரு வெளிநாட்டு குடியுரிமையைப் பெற்றால் அவர் இந்தியக் குடியுரிமையை இழந்தவராகிறார்.

**சரத்து – 11**

- குடியுரிமையை ஒழுங்குபடுத்த சட்டமியற்றும் அதிகாரம் பெற்றது நாடாளுமன்றம் ஆகும். இதன்படி இந்தியக் குடியுரிமைச் சட்டம் – 1955 இயற்றப்பட்டது.

**இந்தியக் குடியுரிமைச் சட்டம் 1955**

இச்சட்டம் இந்திய அரசியலமைப்புச் சட்டம் தொடங்கிய பின்னர் குடியுரிமை பற்றி வகைமுறைப்படுத்துகிறது.

**1. பிறப்பால் குடியுரிமைப் பெறல்**

- ஒரு நபர் 26.01.1950 – ஆம் தேதியிலோ அல்லது அதற்கு பின்போ ஆனால் 1986 – ஆம் ஆண்டு திருத்தச்சட்டம் தொடங்குவதற்கு முன்போ பிறந்திருந்தால் அல்லது 1986 – ஆம் ஆண்டு திருத்தச் சட்டம் தொடங்குவதற்கு பின்பு பிறந்திருந்தால் அவரது பெற்றோரில் எவரேனும் ஒருவர் அவரது பிறப்பின் பொழுது இந்தியக் குடிமகனாக இருப்பின், அவர் பிறப்பால் குடிமகனாவார்.

**2. மரபுவழித் தோன்றலினால் குடியுரிமைப் பெறல்**

- ஒருவர் 24.01.1950 – ஆம் தேதி அல்லது அதற்கு பின்போ ஆனால் 1992 – ம் ஆண்டு திருத்தச் சட்டத்திற்கு முன்பு இந்தியாவிற்கு அப்பால் பிறந்திருந்து அந்தச் சமயத்தில் அவரது தந்தையார் ஒரு இந்தியக் குடிமகனாவரர்.
- ஒரு நபர் 1992 – ம் ஆண்டின் குடியுரிமை திருத்தச் சட்டம் தொடங்குவதற்கு பின்னிட்டு பிறந்திருந்து அச்சமயத்தில் அவரது பெற்றோரில் எவரேனும் ஒருவர் இந்தியக் குடிமகனாக இருப்பின், அவர் மரபு வழித் தோன்றலினால் ஒரு இந்தியக் குடிமகனாவரர்.

**3. பதிவு செய்து கொள்ளல் மூலம் குடியுரிமையைப் பெறல்**

- இந்தியாவில் வழக்கமான குடியிருப்பைக் கொண்ட இந்திய வழித்தோன்றிய நபர்கள் (Origin) தம்மை ஒரு இந்தியக் குடிமகனாகப் பதிவு செய்து கொள்ளும்படி விண்ணப்பித்து குடியுரிமை பெறலாம். ஆனால் அவ்வாறு பதிவிற்கான விண்ணப்பம் செய்வதற்கு 5 ஆண்டுகள் முன்பு வரை அவ்வாறு இந்தியாவில் குடியிருந்திருக்க வேண்டும்.
- பிரிவினையகாத இந்தியாவிற்கு அப்பால் உள்ள இடத்தில் வழக்கமான குடியிருப்பைக் கொண்ட இந்திய வழிதோன்றிய நபர்கள்.

- இந்தியக் குடிமக்களை மணந்து கொண்டு இந்தியாவில் வழக்கமாக குடியிருந்து வரும் நபர்கள்.
- இந்தியக் குடிமக்களாக உள்ள நபர்களின் உரிமை வயதையடையாதக் குழந்தைகள்.
- குடியுரிமைச் சட்டத்தின் முதலாம் அட்டவணையில் குறிப்பிட்ப்பட்டுள்ள ஒரு நாட்டின் குடிமக்களாக உள்ள உரிமை வயது மற்றும் தகுதி அடையாத நபர்கள்.

**4. வெளிநாட்டவர் ஒருவர் தன்னைக் குடிமகனாகக் கோரல் மூலம் குடியுரிமையைப் பெறல்**

- முதலாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட ஒரு நாட்டின் குடிமகனாக இல்லாத மற்றும் உரிமை வயது மற்றும் தகுதி அடைந்த எந்த ஒரு நபரும், உரிய விண்ணப்பம் செய்து குடியுரிமை பெறலாம்.

**5. எல்லையைக் கூட்டியணைத்துக் கொள்வதன் மூலம் குடியுரிமையைப் பெறல்**

- ஒரு வெளிநாட்டு எல்லை இந்தியாவின் ஒரு பகுதியானால், மத்திய அரசானது அந்த எல்லை தொடர்பாக யாரெல்லம் இந்தியக் குடிமக்களாக ஆகின்றனர் என்று குறிப்பிட்டு அதை அரசிதழில் வெளியிட உத்திரவிடலாம்.

**குடியுரிமையின் முடிவு**

**1. இந்தியக் குடியுரிமையைத் துறத்தல் மூலம்**

- இந்தியக் குடிமகனாகவும் அதே சமயத்தில் மற்றொரு நாட்டின் குடிமகனாகவும் உள்ள ஒருவர், தாம் இந்தியக் குடியுரிமையைத் துறப்பதாக உரிய விளம்புகை ஒன்றைச் செய்தால், அவரது இந்தியக் குடியுரிமை முடிவிற்கு வருகிறது. (அவரது உரிமை வயதடையாதக் குழந்தைகளும் இந்தியக் குடிமக்களாக இருக்க முடியாது).

**2. வேறொரு நாட்டின் குடியுரிமையை அடைதல்**

- இந்தியக் குடிமகன் எவரேனும் ஒருவர் தன்னிச்சையாக வேறொரு நாட்டின் குடியுரிமையை அடைந்து கொண்டால் இந்தியக் குடிமகனாக இருக்க முடியாது.

**3. குடியுரிமையை இழக்கச் செய்வதன் மூலம்**

- இது கட்டாயக் குடியுரிமை இழப்பு செய்வதாகும்.
- ஒருவர் வெளிநாட்டவரை இந்தியக் குடிமகனாக்கல் மூலமோ அல்லது பதிவு செய்து கொள்ளல் மூலமோ பெற்று, அவ்வாறு பெற்ற குடியுரிமையானது மோசடியாகவோ, திரித்துக் கூறலினாலோ அல்லது முக்கிய பொருண்மைகளை மறைத்து பெறப்பட்டதாக இருந்தால் அல்லது இந்திய அரசியலமைப்பிற்கு கட்டுப்படாமல் செயல்பட்டால் அல்லது எதிரி நாட்டுடன் சட்டவிரோத வியாபாரம் செய்தால் அவரது குடியுரிமை இழக்கச் செய்யப்படும்.

**2019 இந்தியக் குடியுரிமை (திருத்தச்) சட்டம் (Citizenship (Amendment) Act 2019)**, பாகிஸ்தான், வங்காளதேசம், ஆப்கானித்தான் ஆகிய இசுலாமிய மத அடிப்படை நாடுகளில் வாழ்ந்த மதச்சிறுபான்மையோரான இந்துக்கள், சீக்கியர்கள், சமணர்கள், பௌத்தர்கள், பார்சிகள் மற்றும் கிறித்தவர்கள் துன்புறுத்தல்களுக்கு ஆளாகி, இந்தியாவில் குடியேறியவர்களுக்கு, இந்தியக் குடியுரிமை வழங்குவதற்கு வழிவகை செய்யும் 1955 இந்தியக் குடியுரிமைச் சட்டத்தில் சட்டத் திருத்த மசோதா, இந்திய நாடாளுமன்றத்தின் மக்களவையில், இந்தியாவின் உள்துறை அமைச்சர் அமித் ஷா 09 டிசம்பர் 2019 அன்று பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

மக்களவையில் இச்சட்டத் திருத்தத்திற்கு ஆதராவாக 311 உறுப்பினர்களும், எதிராக 80 உறுப்பினர்களும் வாக்களித்ததால் இச்சட்ட திருத்த மசோதா நிறைவேறியது.மாநிலங்களவையில் இச்சட்டத் திருத்த மசோதா 10 டிசம்பர் 2019 அன்று அறிமுகப்படுத்தப்பட்ட போது, மசோதாவிற்கு ஆதரவாக 125 உறுப்பினர்களும், எதிராக 105 உறுப்பினர்களும் வாக்களித்ததால் சட்ட திருத்த மசோதா நிறைவேற்றப்பட்டது.

இச்சட்டத்திருத்த மசோதாவிற்கு இந்தியக் குடியரசுத் தலைவர் 12 டிசம்பர் 2019 அன்று ஒப்புதல் அளித்ததால், இது சட்டமாக உடனடியாக நடைமுறைக்கு வந்தது.

### குடியுரிமை சட்டத்திருத்தத்தின் முக்கிய அம்சங்கள்

- பாகிஸ்தான், வங்காளதேசம், ஆப்கானித்தான் நாடுகளிலிருந்து இந்தியாவில் குடியேறிய இசுலாமியர் அல்லாத இந்துக்கள், சீக்கியர்கள், சமணர்கள், பௌத்தர்கள், பார்சிகள் மற்றும் கிறித்தவர்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்குவதற்கு வழிவகை செய்கிறது.
- தற்போது தொடர்ந்து 5 ஆண்டுகள் இடையீடுயின்றி இந்தியாவில் வாழ்ந்தவர்களுக்கு மட்டும் இந்தியக் குடியுரிமை வழங்கப்படுகிறது.
- தற்போதைய குடியுரிமை சட்டத் திருத்தத்தில் 5 ஆண்டுகள் இந்தியாவில் தொடர்ந்து வாழும் இசுலாமியர் அல்லாதவர்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்க வகை செய்கிறது.
- இந்த சட்ட திருத்த மசோதா, 1955 இந்தியக் குடியுரிமைச் சட்டத்தில் சில சட்டத் திருத்தங்கள் மேற்கொள்ள வகை செய்கிறது.
- உள்நாட்டு நுழைவுச் சீட்டு மூலம் பாதுகாக்கப்பட்டு வரும் அருணாசலப் பிரதேசம், நாகாலாந்து, மிசோரம் ஆகிய மாநிலங்களுக்கு இச்சட்டத் திருத்தத்தில் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.
- இந்த குடியுரிமை சட்ட திருத்தம் சனவரி 10,2020 முதல் அமலுக்கு வரும் என்று இந்திய அரசு அரசாணை வெளியிட்டது.

### யார் சட்ட விரோத குடியேறிகள்

1955-ஆம் ஆண்டின் இந்தியக் குடியுரிமைச் சட்டத்தின்படி, இந்தியாவில் சட்ட விரோதமாக குடியேறியவர்களுக்கு இந்திய அரசு குடியுரிமைச் சான்று வழங்காது. மேலும் கடவுச் சீட்டு, விசா மற்றும்

செல்லத்தக்க ஆவணங்கள் இன்றி இந்தியாவில் நுழைந்து, நீண்டகாலம் வாழ்பவர்களை சட்டவிரோத குடியேறிகள் எனக்கருதப்படுவர்.

### 2019 குடியுரிமைத் திருத்தச் சட்டத்திற்கு ஆதரவான நாடுகள்

குடியுரிமை திருத்தச் சட்டத்திற்கு பாகிஸ்தான், மலேசியா தவிர்த்து, ஐக்கிய அமெரிக்கா, சீனா, ஆப்கானிஸ்தான், வங்காளதேசம் ஆகிய நாடுகள் இந்தியாவுக்கு ஆதரவு தெரிவித்துள்ளன. மேலும் வளைகுடா நாடுகள், ஐரோப்பிய ஒன்றியம் இச்சட்டத்திருத்தம் குறித்து விவாதிக்க மறுப்பு தெரிவித்துள்ளது.